# தேச பக்தி

DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்:102 ★13.08.2026 ★தமிழ் நாளிதழ் ★வியாழக்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:102 ★13.08.2026 ★TamilDaily ★Thursday ★Page-4 ★Price-₹5/- Chennai



தேச பக்தி நாளிதழில் அனுபவம் உள்ள செய்தியாளர்கள், போட்டோகிராபர்கள், தாலுகா செய்தியாளர்கள் தேவை

தமிழகம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் மாவட்ட மற்றும் தாலுகா வாரியாக அனுபவம் உள்ள பத்திரிக்கை துறையில் சாதிக்க விரும்பும் ஆண் ,பெண் நிருபர்கள் தேவை

G.ராஜா ஆசிரியர்: 9842364068

செய்தி மற்றும் விளம்பர தொடர்புக்கு

R.கண்ணன் இணைஆசிரியர்: 9994422779


## போதைப்பொருள் கடத்தல் வழக்கு: சென்னை, மதுரை உள்ளிட்ட 8 இடங்களில் என்ஐஏ சோதனை

போதைப்பொருள் கடத்தல் வழக்கு தொடர்பாக சென்னை, மதுரை உள்ளிட்ட தமிழகத்தில் 8 இடங்களில் என்ஐஏ அதிகாரிகள் இன்று சோதனையில் ஈடுபட்டனர்.

கடந்த 2024ம் ஆண்டு நவ.23ம் தேதி, அந்தமான் கடற்பகுதியில் சந்தேகத்துக்கு இடமாகச் சென்ற மியான்மர் நாட்டைச் சேர்ந்த படகு ஒன்றை இந்திய கடலோரக் காவல் படையின் கடல்சார் உளவு விமானம் கண்டறிந்தது.

கடல் மற்றும் வான் வழி ஒருங்கிணைந்த அதிரடி நடவடிக்கையின் மூலம் அந்தப் படகு வழிமறிக்கப்பட்டுச் சோதனையிடப்பட்டது.

அப்போது, அந்தப் படகில் கடத்தி வரப்பட்ட ரூ.36 ஆயிரம் கோடி மதிப்பிலான 6,016.87 கிலோ 'மெத்தம்பெட்டமைன்' போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டதுடன், படகில் இருந்த 6 பேரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் நடத்தப்பட்ட முதற்கட்ட விசாரணையில், இந்தச் சர்வதேச போதைப்பொருள் கடத்தல் கும்பலுக்குத் தமிழகம் உள்ளிட்ட நாட்டின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த நபர்களுடன் தொடர்பு இருப்பது தெரியவந்தது.

இதையடுத்து, இந்த மிகப்பெரிய சட்டவிரோதப் போதைப்பொருள் வலையமைப்பைக் கண்டறிந்து முழுமையாக அழிப்பதற்காகத் தேசிய புலனாய்வு முகமை (என்ஐஏ) வழக்குப்பதிவு செய்து விசாரணையைத் தீவிரப்படுத்தியது.

விசாரணையின் தொடர்ச்சியாக, மிசோரம் மற்றும் தமிழகத்தின் பல்வேறு இடங்களில் என்ஐஏ அதிகாரிகள் இன்று காலை முதல் அதிரடி சோதனையில் ஈடுபட்டனர்.

தமிழகத்தைப் பொறுத்தவரை சென்னை, மதுரையில் 8 இடங்களில் இந்தச் சோதனை நடைபெற்றது.

சென்னையில் நந்தனம் சிஐடி நகரில் வசிக்கும் தோல் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி அதிபர் இக்பால் என்பவரது வீட்டில், மத்திய துப்பாக்கி ஏந்திய பாதுகாப்புப் படை வீரர்களின் பாதுகாப்புடன் என்ஐஏ அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

வண்ணாரப்பேட்டை




மின்ட்மார்டன்சிட்டியில் வசித்து வரும் அபூபக்கர் கனி சித்திக் என்பவரது வீட்டிலும், அந்தப் பகுதி கட்டிட உரிமையாளரின் போரூர் வீட்டிலும் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

தாம்பரம் அருகே பெரும்பாக்கம் இந்திரா பிரியதர்ஷினி நகரில் வசிக்கும் சார்லஸ் ஜோசப் ரெட்டி என்பவரது வீட்டில் 10க்கும் மேற்பட்ட அதிகாரிகள் சோதனை நடத்தினர். இவருடன் வெளிமாநிலத்தைச் சேர்ந்த பெண் ஒருவரும் விசாரணை வளையத்துக்குள் கொண்டுவரப்பட்டதாக கூறப்படுகிறது.

சென்னையை அடுத்த ஆவடி தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்பில் வசித்து வரும் துணி வியாபாரி அமீர் வீட்டிலும் என்ஐஏ சோதனை நடந்தது.

இதேபோல், மதுரை மாவட்டம் பெருங்குடியை சேர்ந்த, மணிப்பூர் மாநிலத்தில் தொழில் செய்து வரும் தொழிலதிபர் பாலமுருகன் என்பவரது வீட்டுக்கு அதிகாலை 5.30 மணிக்குச் சென்ற 4 பேர் கொண்ட என்ஐஏ குழுவினர், அவர் வீட்டில் இல்லாததால் அவரது மனைவி முருகேஸ்வரியிடம் 30 நிமிடங்களுக்கும் மேலாக விசாரணை நடத்திச் சில முக்கியத் தகவல்களைச் சேகரித்தனர்.

சென்னை மற்றும் மதுரையில் நடைபெற்ற இந்தச் சோதனைகளின் போது, டிஜிட்டல் ஆதாரங்கள் மற்றும் பல முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

சோதனைகள் முழுமையாக நிறைவடைந்த பின்னரே, பறிமுதல் செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் தகவல்கள் குறித்த முழுமையான விவரங்கள் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்படும் என என்ஐஏ தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'முல்லை பெரியாறு அணை பலமாக உள்ளது' ஆய்வுக்கு பின் அதிகாரிகள் தகவல்

முல்லைப் பெரியாறு அணையை இன்று ஆய்வு செய்த துணை கண்காணிப்புக் குழுவினர், கசிவுநீர் மிகத்துல்லியமாக உள்ளதால் அணை பலமாக உள்ளது என்று தெரிவித்தனர்.

தேசிய அணைகள் பாதுகாப்பு ஆணையத்தின் கட்டுப்பாட்டில் உள்ள முல்லைப் பெரியாறு அணையை கண்காணிப்பதற்காக, தலைவர் அனில் ஜெயின் தலைமையில் மேற்பார்வைக் குழு செயல்பட்டு வருகிறது. இதற்கு உதவியாக, தென் மண்டல இயக்குநர் கிரிதரன் தலைமையில் துணைக் கண்காணிப்புக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.



இக்குழுவில் தமிழகத்தின் சார்பில் பெரியாறு–வைகை வடிநிலக் கோட்ட கண்காணிப்புப் பொறியாளர் சாம் இர்வின், பெரியாறு அணை சிறப்புக் கோட்ட செயற்பொறியாளர் செல்வம் ஆகியோரும், கேரளத்தின் சார்பில் எர்ணாகுளம் மத்திய வட்ட நீர்ப்பாசனப் பிரிவு கண்காணிப்புப் பொறியாளர் ஷைனி ஜோசப், கட்டப்பனை நீர்ப்பாசன துணைப் பிரிவு உதவி நிர்வாகப் பொறியாளர் லெவின்ஸ் பாபு ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

இந்நிலையில், அணையின் நீர்மட்டம் 123 அடியை எட்டியுள்ள நிலையில் இக்குழுவினர் இன்று அணையை ஆய்வுசெய்யவந்தனர். முதற்கட்டமாக பிரதான அணை, சிற்றணை (பேபி அணை), மண் அணை (எர்த் டேம்) உள்ளிட்ட பகுதிகளை பார்வையிட்டனர். பின்பு கேலரி பகுதி, மதகுகளை ஆய்வு செய்தனர்.

மொத்தம் உள்ள 13 மதகுகளில் 3,6 வது மதகை இயக்கி சரிபார்த்தனர். அணையின் கசிவுநீர் நிமிடத்திற்கு 35லிட்டராக இருந்தது. பின்பு குமுளியில் உள்ள கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் ஆலோசனைக் கூட்டம் மாலையில் நடைபெற்றது.

இதில் பேபி அணையைப் பலப்படுத்துவது, வல்லக்கடவு முதல் பெரியாறு அணை வரையிலான பழுதடைந்த சாலைகளைச் சீரமைப்பது உள்ளிட்டவை குறித்து தமிழக அதிகாரிகள் தரப்பில் வலியுறுத்தப்பட்டது.

பின்பு அதிகாரிகள் கூறுகையில், முல்லைப்பெரியாறு அணையின் கசிவு நீரைஆய்வுசெய்தபொது, நிமிடத்திற்கு 35.038 லிட்டராக இருந்தது. இது இன்றைய அணையின் நீர்மட்டத்துக்குகு ஏற்ப மிகத்துல்லியமாக இருப்பதால் அணை பலமாக உள்ளது, கூட்டத்தின் முடிவுகள் உயர்நிலைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்படும் என்றனர்.

### சிபிசிஐடி டிஜிபியாக பாலநாக தேவி நியமனம்:

## தமிழகம் முழுவதும் 10 ஐபிஎஸ் அதிகாரிகள் பணியிட மாற்றம்

உள்துறை செயலர் கே.மணிவாசன் நேற்று பிறப்பித்த உத்தரவில் கூறியிருப்பதாவது:

மாநில சைபர் க்ரைம் பிரிவு டிஜிபியாக இருந்த பி.பால நாக தேவி சிபிசிஐடி டிஜிபியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

அங்கிருந்த அபின் தினேஷ் மோடக் மாநில சைபர் க்ரைம் கூடுதல் டிஜிபியாகநியமிக்கப்பட்டுள்ளார். காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டிருந்த கூடுதல் டிஜிபி வித்யா ஜெயந்த் குல்கர்னி பொருளாதார குற்றப்பிரிவு கூடுதல் டிஜிபியாக பணியமர்த்தப்பட்டுள்ளார்.

இதேபோல், சென்னை காவல் நுண்ணறிவு பிரிவு (2) துணை ஆணையர் எம்.ராமமூர்த்தி க்யூ பிரிவு சிஐடி எஸ்பியாக மாற்றப்பட்டுள்ளார்.

அங்கிருந்தபி.கே.அரவிந்த்சென்னை எஸ்பிசிஐடி பிரிவு (1) எஸ்பியாக பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மேலும், சென்னை வடக்கு மண்டல சிபி சிஐடி எஸ்.பி அர்பிதா ராஜ்புட் சென்னை அண்ணா நகர்காவல்துணை ஆணையராக மாற்றப்பட்டுள்ளார்.



அங்கிருந்த துணை ஆணையர் ஈஸ்வரன் சென்னையில் உள்ள தமிழ்நாடு கமாண்டோ படைப்பிரிவு எஸ்பியாக மாற்றப்பட்டுள்ளார்.

ஆவடி காவல் ஆணையரகத்தில் மத்திய குற்றப்பிரிவு துணை ஆணையராக இருந்த எஸ்.ஆர்.செந்தில் குமார் நாகப்பட்டினம், கடலோரபாதுகாப்பு குழும எஸ்.பியாக மாற்றப்பட்டுள்ளர்.

சென்னை வடக்கு சரக லஞ்ச ஒழிப்பு பிரிவு எஸ்.பி வி.சரவண குமார் தீவிரவாத தடுப்பு பிரிவு எஸ்.பியாகவும், அங்கிருந்த எஸ்.பி டி.ரமேஷ் பாபு திருநெல்வேலி சிட்டி தலைமையிட துணை ஆணையராகவும் மாற்றப்பட்டுள்ளனர்.

இவ்வாறு உத்தரவில் உள்துறை செயலர் கே.மணிவாசன் தெரிவித்துள்ளார்

## அரசுத்துறைகளில் 3 லட்சம் இடங்கள் காலியாக உள்ள நிலையில் 41 காலி இடங்களை நிரப்ப குரூப்2 தேர்வு அறிவிப்பு

### டிஎன்பிஎஸ்சி தேர்வர்கள் அதிர்ச்சி

அரசு துறைகளில் 3 லட்சத்துக்கும் மேற்பட்ட காலிப்பணியிடங்கள் உள்ள நிலையில், வெறும் 41 காலியிடங்களை நிரப்ப குரூப்2 தேர்வு அறிவிப்பு வெளியிடப்பட்டிருப்பது டிஎன்பிஎஸ்சி தேர்வர்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது.

ஒருங்கிணைந்த குரூப் 2, குரூப்2 ஏ தேர்வுக்கான அறிவிப்பினை டிஎன்பிஎஸ்சி நேற்று முன்தினம் வெளியிட்டது. அதில் குரூப்2 பதவிகளில் 41 காலியிடங்களும், குரூப்2 ஏ பதவிகளில் 780 காலியிடங்களும் இடம்பெற்றுள்ளன. குரூப்2 பதவிகளில் இடம்பெற்றுள்ள உதவி தொழிலாளர் ஆய்வாளர், சார்பதிவாளர், துணை வணிக வரி அதிகாரி, தலைமைச் செயலக உதவி பிரிவு அலுவலர் உள்பட 14 விதமான பதவிகளிலும் காலியிடங்களின் எண்ணிக்கை ஒற்றை இலக்கத்தில்தான் உள்ளன.

அரசு துறைகளில் 3 லட்சத்துக்கும் மேற்பட்ட காலிப்பணியிடங்கள் உள்ள சூழலில் வெறும் 41 காலியிடங்களை நிரப்புவதற்காக டிஎன்பிஎஸ்சி குரூப்2 தேர்வு அறிவிப்பு வெளியிடப்பட்டிருப்பது அவர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. இதுகுறித்து டிஎன்பிஎஸ்சி தேர்வர்கள் கூறியதாவது:

அரசு துறைகளில் லட்சக்கணக்கான காலியிடங்கள் இருப்பதாக அரசு ஊழியர் சங்கங்கள் கூறுகின்றன. ஊழியர்கள் பற்றாக்குறை காரணமாக, மூன்று நான்கு பேர் செய்யக்கூடிய அலுவல்களை ஒரே ஊழியர் செய்ய வேண்டியுள்ளது. இதனால், அரசு ஊழியர்களுக்கு பணிச்சுமை அதிகரித்துள்ளது.

முதல்வருக்கு வேண்டுகோள்

அரசு துறைகளில் உள்ள அனைத்து காலிப்பணியிடங்களும் விரைந்து நிரப்பப்படும் எனதவெக தேர்தல் வாக்குறுதி அளித்திருந்தது. அதன் அடிப்படையில், அதிக எண்ணிக்கையிலான தேர்வர்கள் எழுதக்கூடிய குரூப்4 , குரூப்2 தேர்வுகளுக்கு காலிப்பணியிடங்கள் அதிகம் நிரப்பப்படும் என எதிர்பார்த்தோம்.

ஆனால், எங்கள் நம்பிக்கைக்கு நேர் மாறாக குரூப் 2 தேர்வு மூலம் வெறும் 41 காலிப்பணியிடங்கள் நிரப்பப்படும் என அறிவிப்பு வெளியாகியுள்ளது.




ஒருங்கிணைந்த குரூப் 2 தேர்வு மூலம் குறைந்தபட்சம் 2 ஆயிரம் காலிப்பணியிடங்கள் நிரப்புவதற்கு அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்த்தோம். ஆனால், குரூப்2 தேர்வு மூலம் 41 காலியிடங்களும், குரூப் 2 ஏ தேர்வு மூலம் 780 காலி யிடங்களும் என இருதேர்வுகளும்சேர்த்து 821 பணியிடங்கள்தான் நிரப்பப்பட உள்ளன.

சாதாரணமாக குரூப்2 தேர்வுக்கு சுமார் 8 லட்சம் பேர் விண்ணப்பிக்கிறார்கள். இத்தனை பேர் விண்ணப்பிக்கக் கூடிய தேர்வுக்கு வெறும் 41 காலியிடங்களே அறிவிக்கப்பட்டிருப்பது எங்களுக்கு மிகுந்த ஏமாற்றமாக இருக்கிறது. எனவே, குரூப்2, குரூப்2 ஏ தேர்வு மூலம் கூடுதல் பணியிடங்களை நிரப்ப தமிழகமுதல்வர்ஆணையிட வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

தமிழ் நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாநில தலைவர் த.அமிர்தகுமார் கூறும்போது, "தமிழக அரசு பணியில் அனைத்து வகை பதவிகளையும் சேர்த்தால் ஏறத்தாழ நான்கரை லட்சம் காலிப் பணியிடங்கள் வரும்.

நிதிச்செலவினங்களை குறைக்கும் நோக்கில் காலியிடங்கள் காண்பிக்கப்படுவது இல்லை. லட்சக் கணக்கானோர் எழுதும் தேர்வுக்கு குறைந்த காலிப்பணியிடங்கள் அறிவிக்கப்படும்போது, அது கடும் போட்டியை ஏற்படுத்தும்.

இரண்டு மூன்று முறை தேர்வெழுதி பணி கிடைக்காத இளைஞர்களுக்கு தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டு அவர்கள் தங்களுக்கு அரசு பணி கிடைக்காது என்ற நிலைக்கு வந்துவிடுவார்கள். அரசு துறைகளில் காலியிடங்கள் அதிகளவு இருப்பதால் குரூப் 2 தேர்வில் காலிப்பணியிடங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு முன்வர வேண்டும்" என்றார்.

# புதுப்பாளையத்தில் களைகட்டிய கலைத் திருவிழா: 225 மாணவர்கள் திறமைகளை வெளிப்படுத்தினர்

செங்கம், ஆக. 13

திருவண்ணாமலை மாவட்டம் புதுப்பாளையம் ஒன்றிய அளவிலான கலைத் திருவிழா போட்டிகள், 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்காக 'இளையோர் திறன்' என்ற தலைப்பில் புதுப்பாளையம் வட்டார வள மையத்தில் நடைபெற்றது.

விழாவை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் முனிராஜ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு தொடங்கி வைத்து பேசினார்.

அப்போது, கலைத் திருவிழா மாணவர்களின் கலைத்திறனையும் படைப்பாற்றலையும் வெளிக்கொண்டு வருவதற்கான சிறந்த வாய்ப்பாக அமைந்துள்ளது. பாடல், நடனம், ஓவியம், நாடகம், இலக்கியம் உள்ளிட்ட பல்வேறு கலை வடிவங்களில் மாணவர்கள் பங்கேற்பதன் மூலம் தன்னம்பிக்கை, தலைமைத்துவம் உள்ளிட்ட திறன்களை வளர்த்துக் கொள்ள முடியும். மேலும், மாணவர்களிடையே ஆரோக்கியமான போட்டி மனப்பான்மையை உருவாக்கி, அவர்களின் முழுமையான ஆளுமை வளர்ச்சிக்கு இவ்விழா உறுதுணையாக அமைகிறது என்றார்.

புதுப்பாளையம் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் காந்திமதி குத்துவிளக்கேற்றி விழாவை தொடங்கி வைத்தார்.

புதுப்பாளையம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் ரஜினி, வட்டாரக் கல்வி அலுவலர்கள் ஷகிலா, ஆறுமுகம் மற்றும் வட்டார வளமைய மேற்பார்வையாளர் சின்னராஜி ஆகியோர் முன்னிலை வகித்து மாணவர்களை ஊக்கப்படுத்தினர். போட்டிகளில் கவின் கலை, நுண்கலை, இசை, நடனம், நாடகம், இசைக் கருவிகள், தோல் கருவிகள், காற்றுக் கருவிகள், தந்திக் கருவிகள் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் மொத்தம் 225 மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்று தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்.

ஒன்றிய அளவிலான போட்டிகளில் முதல் இடம் பெறும் மாணவர்கள், அடுத்ததாக நடைபெறும் மாவட்ட அளவிலான கலைத் திருவிழாவில் பங்கேற்க உள்ளனர். மாவட்ட அளவில் வெற்றி பெறும் மாணவர்கள் மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்கும் வாய்ப்பைப் பெற உள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் வட்டார வளமைய ஆசிரியர் பயிற்றுநர்கள், தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், சிறப்பு பயிற்றுநர்கள், வட்டார பொறியாளர், கணக்காளர்கள் மற்றும் அலுவலக பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

விழா நிறைவில் வட்டார ஒருங்கிணைப்பாளர் ஜம்புகுமார் நன்றி கூறினார்.





பாடியநல்லூர் நண்பர்கள் நற்பணி மன்றம் சார்பில்

# 14ஆம் ஆண்டாக பக்தர்களுக்கு சுவையான குளிர்பானங்கள்

செங்குன்றம், ஆக 13:

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் கிராமத்தில் பக்தர்களுக்கு அருள்பாளித்து கொண்டு இருக்கும் அருள்மிகு ஸ்ரீ கெங்கையம்மன் ஆலயத்தில் 84ஆம் ஆண்டு ஆடிமாத தீமிதி திருவிழாவை முன்னிட்டு நண்பர்கள் நற்பணி மன்றம் சார்பில் 14ஆம் ஆண்டு வெற்றிப் படைப்பாக ஆலய திடலில் பக்தர்களுக்கு தரமான சுவையான குளிர்பானங்கள் வழங்கும் நிகழ்ச்சி இந்தியன் டீ ஸ்டால் உரிமையாளர் வி.அருள் மற்றும் சமூக சேவகர்கள் ஜி.குமார், சீனிவெங்கட், என்.ஸ்ரீதர் ஆகியோர் ஏற்பாட்டில் சிறப்பாக நடைபெற்றது.

இதில் சுற்றுவட்டாரத்தில் உள்ள அனைத்து பக்தர்கள், கிராம பொதுமக்கள் திரளாக வந்து குளிர்பானங்களை பெற்று சென்றனர். இந்நிகழ்வில் சமூக ஆர்வலர்கள், ஆன்மீகவாதிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.



திண்டுக்கல் மாவட்டம் பழனி சண்முக நதி மிகவும் அசுத்தமாக உள்ளது ஆடி அமாவாசை என்பதால் அதிக பக்தர்கள் வந்து அற மனதுடன் திதி கொடுத்து செல்கின்றன இதை முன்னே எச்சரிக்கையாக தேவஸ்தான நிர்வாகம் அல்லது இத்துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என திதி கொடுக்க வந்தவர்கள் குமுறல்



# உயிரைக் காக்க துணிச்சலுடன் செயல்பட்டவர்களுக்கு 'ஜீவன் ரக்க்ஷா பதக்க' விருது: ஆகஸ்ட் 15க்குள் விண்ணப்பிக்கலாம்

## ஆட்சியர் வந்தனா கார்க்

திருவண்ணாமலை, ஆக.13

2026ஆம் ஆண்டிற்கான 'ஜீவன் ரக்க்ஷா பதக்க' விருதுகளுக்கு திருவண்ணாமலை மாவட்டத்தில் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

இந்திய அரசின் சார்பில், நீரில் மூழ்கியவர்களை மீட்பது, மின்சார விபத்துகள், தீ விபத்துகள், நிலச்சரிவு, விலங்குகளின் தாக்குதல் மற்றும் சுரங்க மீட்பு நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு ஆபத்தான சூழ்நிலைகளில் துணிச்சலுடன் செயல்பட்டு மனித உயிர்களைக் காப்பாற்றுபவர்களுக்கு 'ஜீவன் ரக்க்ஷா பதக்க' விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதில், சர்வோத்தம் ஜீவன் ரக்க்ஷா பதக்கம், உத்தம் ஜீவன் ரக்க்ஷா பதக்கம் மற்றும் ஜீவன் ரக்க்ஷா பதக்கம் ஆகிய பிரிவுகளில் விருதுகள் வழங்கப்படுகின்றன. தகுதியானவர்கள் HTTPS://AWARDS.GOV.IN என்ற இணையதளம் வாயிலாக மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். நேரிலோ அல்லது வேறு இணையதளங்கள்மூலமாகவோசமர்ப்பிக்கப்படும்விண்ணப்பங்கள் முன்னறிவிப்பின்றி நிராகரிக்கப்படும்.

விண்ணப்பிக்க 15.08.2026 அன்று மாலை 5 மணிக்குள் கடைசி நாளாகும். எனவே, திருவண்ணாமலை மாவட்டத்தில் சிறப்பான முறையில் மனித உயிர்களைக் காப்பாற்றி சாதனை புரிந்த தகுதியானவர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி விண்ணப்பிக்குமாறு மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும் விவரங்களுக்கு மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலரை 7401703484 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்புகொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "பெரியாறு அணை ரீல்ஸை பெரிதுபடுத்த வேண்டாம்" கேரள வனத்துறை அமைச்சர்

"பெரியகுளம் தவெக எம்எல்ஏ சபரி ஐங்கரன் பெரியாறு அணையை ட்ரோன் மூலம் படம்பிடித்ததை பெரிதுபடுத்த வேண்டாம். இது என்ன இந்தியாபாகிஸ்தான் எல்லையா?" என்று கேரள வனத்துறை அமைச்சர் ஷிபு பேபி ஜான் தெரிவித்தார்.

கம்பம் பள்ளத்தாக்கு பகுதி முதல் போக சாகுபடிக்காக முல்லை பெரியாறு அணையிலிருந்து கடந்த 8ம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பெரியகுளம் தவெக சட்டப்பேரவை உறுப்பினர் க.சபரி ஐங்கரனும் பங்கேற்றார்.



அப்போது இவருடன் சென்ற குழுவினர் பெரியாறு புலிகள் காப்பகப் பகுதிக்குள் ட்ரோனைப் பறக்கவிட்டு, முல்லைப் பெரியாறு கால்வாய் மற்றும் வனப்பகுதிகளைப் படம்பிடித்தனர். பின்பு இந்த பதிவுகள் சமூகவலைதளங்களில் பதிவிடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் விதிமுறைகளை மீறி ட்ரோனை பறக்கவிட்டது தொடர்பாக விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும் என கேரள வனத்துறையினர் தெரிவித்தனர். இது இரு மாநிலங்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த நிலையில் நேற்று தமிழக கேரள எல்லையான குமுளியில் கேரள வனத்துறை சார்பில் 'ஊரு உணர்வு' திட்டத்தின் கீழ், பழங்குடியின மக்களுடனான கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இதில் பங்கேற்க கேரள வனத்துறை அமைச்சர் ஷிபுபேபி ஜான் வந்திருந்தார். அப்போது செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: தமிழக எம்.எல்.ஏ வுடன் வந்த குழுவினர், பெரியாறு அணைப் பகுதியைப் படம் பிடித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளனர். இதனால் பரபரப்பு ஏற்பட்டதாக சமூகவலைதளங்களில் கருத்து தெரிவிக்கப்பட்டு வருகிறது. இது என்ன இந்தியாபாகிஸ்தான் எல்லையா? பதற்றப்படுவதற்கு.

இது டிஜிட்டல் காலம். கூகுளில் தெருவாரியாகவே பார்க்க முடியும். இரு மாநிலங்களும் நல்லிணக்கத்துடன் இருக்கும் நிலையில் புதிதாக ஒரு பிரச்சினையை உருவாக்கவோ, பெரிதுபடுத்தவோ வேண்டாம்" என்றார். கூட்டத்தில் பீர்மேடு தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் சிரியக் தாமஸ், கூடுதல் முதன்மைத் தலைமை வனப் பாதுகாவலர் பிரமோத்ஜி கிருஷ்ணன், மாவட்ட வன அலுவலர் லட்சுமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சேத்துப்பட்டு அருகே

# 190வது ஆண்டு பரதேசி ஆறுமுக சுவாமிகள் குருபூஜை விழா

## குழந்தை வரம் வேண்டி குளக்கரையில் 'மண்சோறு' சாப்பிட்டு பெண்கள் நேர்த்திக்கடன்

சேத்துப்பட்டு, ஆக. 13

திருவண்ணாமலை மாவட்டம் சேத்துப்பட்டு அருகே கோட்டுப்பாக்கம் கிராமத்தில் நடைபெற்ற பரதேசி ஆறுமுக சுவாமிகள் குருபூஜை மற்றும் ஆடி அமாவாசை அன்னதான விழாவில், குழந்தை வரம் வேண்டி பெண்கள் மண் சோறு சாப்பிட்டு நேர்த்திக்கடன் செலுத்திய நிகழ்வு நடைபெற்றது.

கோட்டுப்பாக்கம் கிராமத்திற்கு சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு பரதேசி ஆறுமுக சுவாமிகள் வந்ததாகவும், அப்போது அப்பகுதியில் நோயால் பாதிக்கப்பட்டிருந்த மக்களுக்கு அருகிலுள்ள காட்டுப்பகுதியில் இருந்து மூலிகைகளை கொண்டு வந்து மருந்து தயாரித்து வழங்கியதாகவும்கூறப்படுகிறது. இதனால் குணமடைந்த மக்கள், ஆறுமுக சுவாமிகள் மீது பக்தி கொண்டு, அவர் நிரந்தரமாக தங்குவதற்காக தோட்டத்துடன் கூடிய வீட்டை வழங்கியதாக பக்தர்கள் தெரிவிக்கின்றனர்.

அங்கு தங்கி மூலிகை மருத்துவம் செய்து வந்த ஆறுமுக சுவாமிகள், ஆன்மிகப் பணிகளிலும் ஈடுபட்டதாககூறப்படுகிறது. பின்னர் அவர் ஜீவசமாதி அடைந்த இடத்தில் பொதுமக்கள் கோவில் அமைத்து ஆண்டுதோறும் குருபூஜை மற்றும் ஆடி அமாவாசை அன்னதான விழாவை நடத்தி வருகின்றனர்.

அதன்படி, இந்த ஆண்டு 190வது ஆண்டு குரு பூஜை மற்றும் ஆடி அமாவாசை அன்னதான விழா கடந்த 10ந் தேதி சன்மார்க்க சங்க கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழாவையொட்டி கோவில்களில் சிறப்பு அபிஷேகம் மற்றும் ஆராதனைகள் நடைபெற்றன. தொடர்ந்து தமிழ் வேதப் பாடல்கள் முற்றோதல், இசை நிகழ்ச்சி, பட்டிமன்றம், தேவாரம், திருவாசகம், திருப்புகழ் முற்றோதல் மற்றும் பக்தி சொற்பொழிவுகள் நடைபெற்றன.

மேலும், பொன்னியம்மன் கோவிலில் பொது மக்கள் சார்பில் பொங்கல் வைத்து சிறப்பு வழிபாடு நடத்தப்பட்டது. இரவு இன்னிசை கச்சேரியும், பக்தர்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது.

விழாவின் முக்கிய நிகழ்ச்சியாக நேற்று காலை கோவில்களில் உள்ள உற்சவர் மற்றும் மூலவர்களுக்கு சிறப்பு அபிஷேகம், கோ பூஜை மற்றும் பஜனை ஊர்வலம் நடைபெற்றது. பக்தர்கள் காவடி எடுத்து ஊர்வலமாக வந்து ஆறுமுக சுவாமிக்கு நேர்த்திக்கடன் செலுத்தினர். தொடர்ந்து பரதேசி ஆறுமுக சுவாமிக்கு சிறப்பு படையலிட்டு பூஜைகள் நடைபெற்றன. இதையடுத்து, குழந்தை வரம் வேண்டி வந்திருந்த பெண்களுக்கு பரதேசி அடியார்கள் மூலம் பிரசாதம் வழங்கப்பட்டது. பெண்கள் அந்த பிரசாதத்தை பயபக்தியுடன் முந்தானையில் பெற்றுக்கொண்டு அருகிலுள்ள குளக்கரைக்கு சென்றனர்.

அங்கு குளத்தின் படியில் பிரசாதத்தை வைத்து, மண்டியிட்டு இரு கைகளையும் பின்புறமாக கட்டிக்கொண்டு வாயால் கவ்வி மண் சோறு சாப்பிட்டு நேர்த்திக்கடன் செலுத்தினர். இதன் மூலம் குழந்தை பாக்கியம் கிடைக்கும் என்பது தங்களது நம்பிக்கை என பெண்கள் தெரிவித்தனர்.

இந்த நூதன வழிபாட்டு நிகழ்ச்சியில் குழந்தை வரம் வேண்டி சுமார் ஆயிரம் பெண்கள் பங்கேற்று மண் சோறு சாப்பிட்டு நேர்த்திக்கடன் செலுத்தினர். பின்னர் அவர்கள் ஆறுமுக சுவாமியை வழிபட்டு தங்களது வீடுகளுக்கு சென்றனர்.

விழாவில் பங்கேற்ற பக்தர்கள் அனைவருக்கும் காலை முதல் மாலை வரை அன்னதானம் வழங்கப்பட்டது. பக்தர்கள் அரிசி மற்றும் தங்களது விளைநிலங்களில் விளைந்த தானியங்களை காணிக்கையாக செலுத்தினர்.

கடந்த ஆண்டு இந்த நேர்த்திக்கடனில் பங்கேற்ற பெண்களுக்கு குழந்தை பிறந்ததாகக் கூறி, அவர்களது குடும்பத்தினர் குழந்தைகளுடன் கோவிலுக்கு வந்து குழந்தையின் எடைக்கு நிகராக நாணயம், வெல்லம், சர்க்கரை உள்ளிட்டவற்றை காணிக்கையாக செலுத்தினர்.

விழா ஏற்பாடுகளை கோட்டுப்பாக்கம் கிராம பொதுமக்கள், விழாக்குழுவினர் மற்றும் சன்மார்க்க சங்கத் தொண்டர்கள் செய்திருந்தனர்.



சொக்கம்பட்டியில் நெடுஞ்சாலைத்துறையை கண்டித்து

# சாலை தோண்டப்பட்டு 10 நாட்களாகியும் பணி தொடங்காததால் மக்கள் அவதி

## மாபெரும் கவனஈர்ப்பு ஆர்ப்பாட்டம்

தென்காசி, ஆக.13

தென்காசி மாவட்டம் சொக்கம்பட்டி பகுதியில் மதுரை–கொல்லம் தேசிய நெடுஞ்சாலையில்சாலைப் பணிக்காக சாலையை தோண்டி எடுத்துவிட்டு, 10 நாட்களுக்கும் மேலாக புதிய சாலை அமைக்கும் பணிகள் தொடங்கப்படாமல் இருப்பதாக பொதுமக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.



சாலை தோண்டப்பட்ட நிலையில் கிடப்பதால் அப்பகுதி முழுவதும் புழுதி அதிகமாக எழுந்து சுற்றுச்சூழல் மாசுபடுவதுடன், பொதுமக்கள், பள்ளி மாணவர்கள் மற்றும் வாகன ஓட்டிகள் கடும் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர். குறிப்பாக இருசக்கர வாகனங்களில் செல்வோர் சாலை நிலை காரணமாக விபத்து ஏற்படும் அபாயமும் இருப்பதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

சாலைப் பணிகளை விரைந்து முடித்து, பொதுமக்களின் சிரமத்தை போக்கநெடுஞ்சாலைத்துறைநிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பலமுறை கவனத்திற்கு கொண்டு சென்றும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனக் கூறி, நெடுஞ்சாலைத்துறை நிர்வாகத்தை கண்டித்து சொக்கம்பட்டி ஊர் பொது மக்கள் சார்பில் விரைவில் மாபெரும் கவனஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. பொதுமக்களின் பாதுகாப்பையும், பள்ளி மாணவர்களின் நலனையும் கருத்தில் கொண்டு, தோண்டப்பட்ட சாலையில் பணிகளை தாமதமின்றி தொடங்கி விரைந்து முடிக்க வேண்டும் என்பதே அப்பகுதி மக்களின் முக்கிய கோரிக்கையாக உள்ளது.

### சின்னமனூரில் களைகட்டிய கலை திருவிழா:

# சிவகாமி மெட்ரிக் பள்ளியில் திரண்ட மாணவச் செல்வங்கள்

தேனி மாவட்டம் சின்னமனூர் ஒன்றியத்திற்குட்பட்ட பள்ளிகளில் பயிலும் 1ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரையிலான அனைத்து மாணவர்களுக்கான கலை திருவிழா போட்டிகள், பள்ளிக் கல்வித் துறையின் வட்டார வள மையம் சார்பில் சிவகாமி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் கோலாகலமாக தொடங்கின. இப்போட்டிகளை வட்டார கல்வி அலுவலர்கள், மேற்பார்வையாளர் மற்றும் சிவகாமி மெட்ரிக் பள்ளியின் தாளாளர் ஆகியோர் ஆகஸ்ட் 11 அன்று முறைப்படி தொடங்கி வைத்தனர். ஆசிரியர் பயிற்றுநர்களின் நேர்த்தியான திட்டமிடலில் நிகழ்ச்சிகள் மிகச் சிறப்பாக ஒருங்கிணைக்கப்பட்டன. போட்டிகளை நடுநிலையோடு நடத்த ஒரு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர், ஒரு தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர், இரண்டு பெற்றோர் ஆசிரியர் கழக உறுப்பினர்கள் மற்றும் இரண்டு பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் அடங்கிய சிறப்பு அமைப்பு குழு உருவாக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர் நடுவர்களால் வழங்கப்பட்ட மதிப்பெண்களின் அடிப்படையில் முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களின் முடிவுகளை அமைப்பு குழுவினர் முறைப்படி சரிபார்த்து வெளியிட்டனர். தொடக்க நாளான ஆகஸ்ட் 11 அன்று 9 மற்றும் 10ஆம் வகுப்பு மாணவர்களுக்கான கலை போட்டிகள் விறுவிறுப்பாக நடைபெற்று முடிந்தன. அதனை தொடர்ந்து, ஆகஸ்ட் 12 அன்று 11 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கான பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் போட்டிகளும் சிவகாமி மெட்ரிக் பள்ளியில் நடைபெற்றன. மேலும், இதன் தொடர்ச்சியாக வரும் செப்டம்பர் 1 மற்றும் 2ஆம் தேதிகளில் 1 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கான கலைத் திருவிழா போட்டிகள் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.



# பட்டரவாக்கம் இரயில் நிலையம் அருகே 5 கிலோ கஞ்சா பறிமுதல் : ஒருவர் கைது



அம்பத்தூர், ஆக13:

தமிழக முதலமை ச்சரின் போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கையாகவும், ஆவடி காவல் ஆணையாளர் டி.செந்தில்கு மார் உத்தரவுபடியும் , காவல் இணை ஆணையாளர் மருத்துவர் ஆர். சிவகுமார் மேற்பார்வையில், மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல் உதவி ஆணையாளர் கலியசுந்தரம் வழிகாட்டுதலின் படியும் அம்பத்தூர் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு காவல் ஆய்வாளர் ஜெகநாதன் தலைமையிலான போலீசார் கஞ்சா விற்பனை தொடர்பான ரகசிய தகவலின் பேரில் பட்டரவாக்கம் ரயில் நிலையம் அருகே கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு அப்பகுதியில் சந்தேகத்திற்கிடமாக சுற்றித்திரிந்த ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த சிந்து குண்டியா (வயது 26)என்பவரிடம் விசாரணை மேற்கொண்டு சோதனை செய்ததில் சுமார் 05 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டது. மேலும் விசாரணை யில் குற்றவாளி கஞ்சாவை ஒடிசா மாநிலத்தில் இருந்து விற்பனைக்காக வாங்கி வந்தது தெரிய வந்தது. இதனைத் தொடர்ந்து குற்றவாளி யை கைது செய்து அம்பத்தூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் வழக்கு பதிவு செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.



தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், அகமலை கிராமத்தில் உள்ள அரசு நடுநிலைப்பள்ளியில் மாணவர்களின் கற்றல் மற்றும் வாசிப்புத் திறன் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.



திண்டுக்கல் பாடியூர் அருகே மக்கள்தொகை தொகை கணக்கெடுப்பு பணியில் ஈடுபட்ட ஆசிரியை மீது தாக்குதல் நடத்திய தவெக பிரமுகர் பாலமுருகன் கைது

### தவெக சார்பில்

# ஏழை எளியமக்களுக்கு தையல் இயந்திரம், ஊனமுற்றோருக்கு மிதிவண்டி, ஆட்டோ உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்குதல்

செங்குன்றம், ஆக13:

மாதவரம் தொகுதி திருவள்ளூர் தென்மேற்கு மாவட்டம் சோழவரம் கிழக்கு ஒன்றியம் பாடிய நல்லூர் ஊராட்சி ஆட்டந்தாங்கல் கிராமம் பாலமுருகன் நகர் பிள்ளையார் கோயில் அருகே தமிழக வெற்றி கழக தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான ச.ஜோசப் விஜய் வழிகாட்டுதலின்படி ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி தவெக நிர்வாகி வசந்தபிரியா ஏற்பாட்டில் சிறப்பாக நடைபெற்றது.

சோழவரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் மேகநாதன் முன்னிலை வகித்தார்.

நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக திருவள்ளூர் தென்மேற்கு மாவட்ட கழகச் செயலாளரும் உறுப்பினர் சேர்க்கை அணியின் மாநில துணை செயலாளரும் மாதவரம் சட்ட மன்ற உறுப்பினருமான எம். எல்.விஜய்பிரபு தலைமை ஏற்று கழக கொடியேற்றி, பெண்களுக்கான இலவச தையல் பயிற்சி மையத்தை துவக்கி வைத்து, 15 மகளிருக்கு இலவச தையல் இயந்திரம், 300 நபர்களுக்கு தலா 5 கிலோ அரிசி, 3 ஊனமுற்றோர்களுக்கு மிதிவண்டி, 2 பேருக்கு ஆட்டோ உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளையும் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் அறுசுவை அன்னதானத்தை வழங்கினார்.

இதில் மாவட்ட, பகுதி, ஒன்றியம், கிளை கழக. நிர்வாகிகள், பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் திரளாக கலந்துகொண்டனர்.







### முதலமைச்சர் கோப்பை 2026:

# செப்டம்பர் 4 முதல் விளையாட்டுப் போட்டிகள் ஆகஸ்ட் 31க்குள் பதிவு செய்யலாம்

## திருவண்ணாமலைஆட்சியர் வந்தனா கார்க் தகவல்

திருவண்ணாமலை, ஆக.13

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் ஆண்டுதோறும் நடத்தப்படும் முதலமைச்சர் கோப்பை விளை யாட்டுப் போட்டிகள், இந்த ஆண்டு திருவண்ணாமலை மாவட்டத்தில் செப்டம்பர் 4ஆம் தேதி முதல் தொடங்க உள்ளதாக மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார். விளையாட்டுத் திறமைகளை ஊக்குவித்து, திறமையான வீரர், வீராங்கனைகளுக்கு உரிய அங்கீகாரம் மற்றும் பரிசுகளை வழங்கும் நோக்கில் மாவட்டம், மண்டலம் மற்றும் மாநில அளவில் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

45 வகையான விளையாட்டுகள்

கடந்த ஆண்டு நடைபெற்ற 38 வகையான விளையாட்டுகளுடன், இந்த ஆண்டு முதல் வில்வித்தை, வுஷூ, துப்பாக்கி சுடுதல், யோகா, மல்லர்கம்பம், ஸ்பீடு ஸ்கேட்டிங், கயாக்கிங், கேனோயிங் உள்ளிட்ட புதிய விளையாட்டுகள் சேர்க்கப்பட்டுள்ளன. இதன் மூலம் மொத்தம் 45 வகையான விளையாட்டுப் போட்டிகள் செப்டம்பர் முதல் அக்டோபர் 2026 வரை நடத்தப்பட உள்ளன.

யார் பங்கேற்கலாம்?

6ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் 19 வயதுக்குட்பட்ட மாணவ, மாணவியர்கள், இளங்கலை முதலாம் ஆண்டு முதல் முதுகலை இரண்டாம் ஆண்டு வரை மற்றும் பாலிடெக்னிக் படிக்கும் 25 வயதுக்குட்பட்ட மாணவ, மாணவியர்கள் போட்டிகளில் பங்கேற்கலாம்.

மேலும், 15 முதல் 35 வயது வரையிலான பொதுப்பிரிவினர், அனைத்து வயது மாற்றுத் திறனாளிகள் மற்றும் அரசு ஊழியர்களுக்கும் போட்டிகள் நடத்தப்பட உள்ளன.

வெற்றி பெறுபவர்களுக்கு பரிசுகள்

மாவட்ட மற்றும் மண்டல அளவிலான தனிநபர்போட்டிகளில்வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக ரூ.3,000, இரண்டாம் பரிசாக ரூ.2,000, மூன்றாம் பரிசாக ரூ.1,000 வழங்கப்படும். மாநில அளவிலான தனிநபர்போட்டிகளில்முதல் பரிசாக ரூ.1 லட்சம், இரண்டாம் பரிசாக ரூ.75 ஆயிரம், மூன்றாம் பரிசாக ரூ.50 ஆயிரம் வழங்கப்படும். குழு போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக தலா ரூ.75 ஆயிரம், இரண்டாம் பரிசாக தலா ரூ.50 ஆயிரம், மூன்றாம் பரிசாக தலா ரூ.25 ஆயிரம் வழங்கப்பட உள்ளது.

ஆகஸ்ட் 31க்குள் பதிவு

போட்டிகளில் பங்கேற்க விரும்புவோர் 06.08.2026 முதல் 31.08.2026 வரை "TNC MTROPHY.SDAT.IN" என்ற இணையதளத்தில் உரிய ஆவணங்களுடன் பதிவு செய்ய வேண்டும். தாங்களாகவோ அல்லது தங்கள் பள்ளி, கல்லூரி மூலமாகவோ பதிவு செய்து கொள்ளலாம்.

விளையாட்டில் ஆர்வமுள்ள அனைவரும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று தங்களது திறமைகளை வெளிப்படுத்துமாறு மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும் விவரங்களுக்கு திருவண்ணாமலை மாவட்ட விளையாட்டு அலுவலரை 7401703484 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்புகொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில்

# மக்கள் தொடர்பு திட்ட முகாமில் ரூ.10.30 கோடி மதிப்பீட்டில் நலத்திட்டங்கள்

பொன்னேரி, ஆக 13:

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம் ஆலாடு கிராமத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கவிதா 522 பயனாளிகளுக்கு பட்டா, மின்னனு குடும்ப அட்டை, வேளாண்மை இடுப்பொருட்கள், காதொலி கருவிகள் உள்ளிட்ட நலத்திட்டங்கள் ரூ.10.30 கோடி மதிப்பீட்டில் வழங்கினார்.



இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் கே.வி.ராஜ்குமார், உதவி ஆட்சியர் (பயிற்சி) பி.பவித்ரா., பொன்னேரி சார் ஆட்சியர் ப.அப்துல் ராசிக், இணை இயக்குநர் (வேளாண்மை) செல்வராஜ், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) வெங்கடேசன். பொன்னேரி வட்டாட்சியர் கே.ஜெ. ஜெய்கர்பிரபு மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

# பாடியநல்லூர் ஸ்ரீ கெங்கையம்மன் ஆலய 84ஆம் ஆண்டு தீமிதி திருவிழா

செங்குன்றம், ஆக13:

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சி அருள்மிகு ஸ்ரீ கெங்கையம்மன் ஆலயத்தில் 84ஆம் ஆண்டு ஆடிமாத தீமிதி திருவிழா ஆலய நிர்வாகிகள் பிரகாசம், முனுசாமி, விஜயரங்கம், ஜானகிராமன், ராஜா, ஏகாம்பரம், சுரேஷ், கோவிந்தராஜ், சுப்பிரமணி, சரவணன், எல்லையப்பன், செல்வம், சுரேந்தர், செல்வம் உள்ளிட்ட கிராம பொது மக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது.

காப்பு கட்டிய பக்தர்கள் தீகுண்டத்தில் இறங்கிதங்களின்நேர்த்தி கடனை பூர்த்தி செய்தனர்.





இத்திருவிழாவை முன்னிட்டு ஆலயம் மற்றும் உபயதாரர்கள் சார்பில் அன்னதானம், இன்னிசை கச்சேரி மற்றும் குளிர்பானங்கள் வழங்கினர்.

இதில் சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு பொங்கல் வைத்து அர்ச்சனை செய்து சுவாமி தரிசனம் செய்தனர்.

முடிவில் அம்மன் உற்சவர் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாள வானவேடிக்கையுடன் திருவீதி உலாநடைபெற்றது.

‘உங்களைத் தேடி உங்கள் ஊரில்’ திட்டம்:

# போளூர் வட்டத்தில் வளர்ச்சிப்பணிகள், பள்ளி, அங்கன்வாடி, நியாய விலைக்கடை, மருத்துவமனை, வேளாண்மை மையங்களில் ஆய்வு செய்த கலெக்டர் வந்தனா கார்க்

## பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்

திருவண்ணாமலை, ஆக.13

திருவண்ணாமலை மாவட்டத்தில் ‘உங்களைத் தேடி உங்கள் ஊரில்’ திட்டத்தின் கீழ், போளூர் வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் இன்று (12.08.2026) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அரசின் நலத்திட்டங்கள் மற்றும் சேவைகள் தடையின்றி விரைந்து பொது மக்களை சென்றடைவதை உறுதி செய்யும் நோக்கில், ‘உங்களைத் தேடி உங்கள் ஊரில்’ திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், தேர்வு செய்யப்படும் வட்டத்தில் மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட அளவிலான அலுவலர்கள் நேரில் சென்று பல்வேறு அரசுத் துறைகளின் திட்டங்கள் மற்றும் சேவைகளின் செயல்பாடுகளை ஆய்வு செய்து வருகின்றனர்.

பள்ளி, அங்கன்வாடியில் ஆய்வு

அதன்படி, போளூர் வட்டம் குருவிமலை ஊராட்சியில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிக்கு சென்ற மாவட்ட ஆட்சியர், மாணவ, மாணவிகளின் கற்றல் மற்றும் வாசிப்புத் திறனை ஆய்வு செய்ததுடன், பள்ளியில் உள்ள அடிப்படை வசதிகள் குறித்தும் கேட்டறிந்தார்.

தொடர்ந்து, குருவிமலை ஊராட்சியில் செயல்பட்டு வரும் அங்கன்வாடி மையத்தில் ஆய்வு மேற்கொண்ட அவர், குழந்தைகளின் வருகைப் பதிவேடு, எடை மற்றும் உயரம் முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதை சரிபார்த்தார். மேலும், குழந்தைகளின் கற்றல் மற்றும் வாசிப்புத் திறனையும் ஆய்வு செய்தார்.

காங்கேயனூர் ஊராட்சியில் ரூ.37.55 லட்சம் மதிப்பீட்டில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் கட்டப்பட்டு வரும் கூடுதல் வகுப்பறைக் கட்டுமானப் பணிகளையும் ஆட்சியர் பார்வையிட்டு, பணிகளை விரைந்து முடிக்க அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

அங்குள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் மாணவர்களின் கற்றல் திறனை ஆய்வு செய்ததுடன், சத்துணவுக் கூடத்தில் உணவுப் பொருட்களின் இருப்பு மற்றும் மாணவர்களுக்கு தரமான உணவு முறையாக வழங்கப்படுகிறதா என்பதையும் ஆய்வு செய்தார்.



நியாய விலைக்கடை, வேளாண்மை மையத்தில் ஆய்வு

வசூர் ஊராட்சியில் உள்ள நியாய விலைக்கடையில் அத்தியாவசியப் பொருட்களின் தரம், இருப்பு மற்றும் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொருட்கள் முறையாக விநியோகிக்கப்படுகிறதா என்பதை மாவட்ட ஆட்சியர் ஆய்வு செய்தார். அதே பகுதியில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையத்தில் விதைகள் மற்றும் உயிர் உரங்கள் விற்பனை, இருப்பு உள்ளிட்ட விவரங்களையும் கேட்டறிந்தார்.

வசூர் ஊராட்சியில் வேளாண் சந்தைப்படுத்துதல் மற்றும் வேளாண் பொறியியல் துறை சார்பில் ரூ.2 கோடியே 15 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் விதை சுத்திகரிப்பு நிலையத்தையும் பார்வையிட்டு, கட்டுமானப் பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

முருகாபாடி ஊராட்சியில் தோட்டக்கலைத் துறை சார்பில் செயல்பட்டு வரும் வட்டார அளவிலான நாற்றங்கால் பண்ணைக்குச் சென்ற ஆட்சியர், அங்கு வளர்க்கப்பட்டுவரும் பல்வேறு வகையான மரக்கன்றுகளை பார்வையிட்டார்.

மருத்துவம், குடிநீர் திட்டப் பணிகள் ஆய்வு

களம்பூர் பேரூராட்சியில் உள்ள மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஆய்வு மேற்கொண்ட ஆட்சியர், மருத்துவமனையின் செயல்பாடுகள், அடிப்படை வசதிகள் மற்றும் மருந்துகளின் இருப்பு குறித்து கேட்டறிந்தார். தேசிய சுகாதார இயக்கத் திட்டத்தின் கீழ் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கூடுதல் மருத்துவமனைக் கட்டுமானப் பணிகளையும் பார்வையிட்டார்.

மேலும், அம்ருத் திட்டத்தின் கீழ் ரூ.17.98 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியையும் ஆய்வு செய்தார். அதனை விரைவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

நெல் கொள்முதல் நிலையம், கால்நடை மருத்துவமனையில் ஆய்வு

போளூர் நகராட்சியில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் கீழ் செயல்படும் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டார்.

விவசாயிகளிடம் கொள்முதல் செய்யப்பட்ட நெல்லின் பதிவேடுகள், கொள்முதல் தொகை விவசாயிகளுக்கு முறையாக வழங்கப்படுகிறதா என்பது குறித்தும் ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, போளூர் நகராட்சியில் உள்ள கால்நடை மருத்துவமனையில் சமூக நாய்களுக்கு மேற்கொள்ளப்பட்டு வரும் வெறிநோய் தடுப்பூசி முகாமை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்

பின்னர், குன்னத்தூர் எஸ்.எம்.எஸ். திருமண மண்டபத்தில் ‘உங்களைத் தேடி உங்கள் ஊரில்’ திட்டத்தின் கீழ் நடைபெற்ற நிகழ்ச்சியில், பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

இதில், 4 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டா ஆணைகள், 6 பேருக்கு உட்பிரிவு பட்டா மாறுதல் ஆணைகள், 10 பேருக்கு இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகை, 5 பேருக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டன.

மேலும், பழங்குடியினர் நலத்துறை சார்பில் 12 பயனாளிகளுக்கு பழங்குடியினர் நலவாரிய உறுப்பினர் அட்டைகள் வழங்கப்பட்டன. வேளாண்மைத் துறை சார்பில் 3 பயனாளிகளுக்கு குறுவை சாகுபடி தொகுப்பு மற்றும் பயறு வகைகளுக்கான தன்னிறைவு இயக்கத்தின் கீழ் உதவிகள் வழங்கப்பட்டன. தோட்டக்கலைத் துறை சார்பில் 2 பயனாளிகளுக்கு கல் பந்தல் சாகுபடி மற்றும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம்

தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தலைமையில் ‘உங்களைத் தேடி உங்கள் ஊரில்’ திட்டத்தின் கீழ் அனைத்து துறை அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இதில், அலுவலர்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட துறை சார்ந்த ஆய்வுகள், பொதுமக்களிடம் பெறப்பட்ட குறைகள் மற்றும் துறை சார்ந்த பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. கண்டறியப்பட்ட குறைகளை விரைந்து தீர்த்து, அரசின் திட்டங்கள் முழுமையாக மக்களை சென்றடைவதை உறுதி செய்ய வேண்டும் என மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தினார். இந்த ஆய்வுகளில் மாவட்ட வருவாய் அலுவலர் அ.சிவசுப்பிரமணியன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இணை இயக்குநர்/திட்ட இயக்குநர் பூ.காஞ்சனா, ஆரணி வருவாய் கோட்டாட்சியர் சிவா, துணை இயக்குநர் (தோட்டக்கலை) கோகிலா சக்தி, போளூர் வட்டாட்சியர் பாலாஜி, போளூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், களம்பூர் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.



# வேளாண் பட்ஜெட்டை கண்டித்து செய்யாற்றில் விவசாயிகள் நூதன ஆர்ப்பாட்டம்

## ஆடி அமாவாசையையொட்டி வேளாண் பட்ஜெட்டுக்கு திதி கொடுத்து போராட்டம்

செய்யாறு, ஆக.13

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாற்றில் வடக்கு மண்டல விவசாயிகள் சங்கம் சார்பில் தமிழக அரசின் வேளாண் பட்ஜெட்டை கண்டித்து ஆடி அமாவாசையையொட்டி நூதன முறையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில், விவசாயிகள் ஆற்றில் இறங்கி, வேளாண் பட்ஜெட்டுக்கு திதி கொடுக்கும் வகையில் சடங்குகள் செய்து தங்களது எதிர்ப்பை தெரிவித்தனர். விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை என்பதை வலியுறுத்தும் வகையில் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

கடந்த ஆட்சிக் காலத்தில் வேளாண் துறைக்கு ரூ.4,100 கோடி ஒதுக்கப்பட்டதாகவும், தற்போதைய தவெக ஆட்சியில் ரூ.3,643 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் குற்றம் சாட்டினர்.

வேளாண் துறைக்கான நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டிருப்பது விவசாயிகளுக்கு ஏமாற்றம் அளிப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

மேலும், விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும், ஒரு ஏக்கருக்கு ரூ.10 ஆயிரம் ஊக்கத்தொகை வழங்க வேண்டும், விவசாய நிலங்களுக்கு தேவையான நீராதாரத்தை உறுதி செய்ய தடுப்பணைகள் அமைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை அரசு நிறைவேற்றவில்லை என விவசாயிகள் குற்றம் சாட்டினர். விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் வகையில் வேளாண் பட்ஜெட்டில் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து, நீர்ப்பாசனம், விவசாயக் கடன், ஊக்கத்தொகை உள்ளிட்ட முக்கிய கோரிக்கைகளுக்கு தீர்வு காண வேண்டும் என அவர்கள் வலியுறுத்தினர்.

ஆடி அமாவாசை நாளில் வேளாண் பட்ஜெட்டுக்குதிதிகொடுத்து விவசாயிகள் நடத்திய இந்த நூதன ஆர்ப்பாட்டம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.



# பழனி ஆயக்குடி ஆய்வாளர் ராஜேஷ் சிறப்பு குறை தீர்ப்பு முகாம்

## நேரடி புகார் மனு விசாரணை செய்து வருகின்றனர்

பழனி ஆயக்குடி ஆய்வாளர் ராஜேஷ் சிறப்பு குறை தீர்ப்பு முகாம் நேரடி புகார் மனு விசாரணை செய்து வருகின்றனர்

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகேயுள்ள ஆயக்குடி காவல் நிலையத்தில், பொதுமக்களின் பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வு காணும் வகையில் சிறப்பு குறை தீர்ப்பு முகாம் நடைபெற்று வருகிறது. பொதுமக்களின் நிலுவையில் உள்ள புகார்கள் மற்றும் அன்றாடப் பிரச்சினைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காணும் நோக்கில் இந்த சிறப்பு முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது ★

★நேரடி விசாரணை: முகாமிற்கு வருகைதரும் பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் புகார்கள் மீது, காவல் அதிகாரிகள் உடனடியாக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். குடும்பத் தகராறு, எல்லைப் பிரச்சினை, புகார்கள் மற்றும் பொது அமைதிக்குக் குந்தகம் விளைவிக்கும் விவகாரங்களில், இரு தரப்பையும் அழைத்துப்பேசி நிலுவையில் உள்ள மனுக்களுக்கு உடனுக்குடன் தீர்வு காணப்பட்டு வருகிறது. பொதுமக்களுக்கும் காவல்துறைக்கும் இடையேயான நல்உறவை மேம்படுத்தவும், சட்டப்பூர்வமான புகார்களுக்கு விரைந்து நீதி கிடைக்கவும் இந்த முகாம் பெரிதும் உதவியாக இருப்பதாக அப்பகுதி பொதுமக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்★.

# தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் வட்டம், அகமலை கிராமத்தில்

## மக்கள் தொடர்பு திட்ட முகாமில், பொதுமக்களிடம் மனுக்கள் பெற்று 89 பயனாளிகளுக்கு ரூ.48.01 இலட்சம் மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகள்

### மாவட்ட ஆட்சித்தலைவர் இரா.வைத்திநாதன், வழங்கினார்

தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் வட்டம், அகமலை கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில், பொதுமக்களிடம் மனுக்கள் பெற்று 89 பயனாளிகளுக்கு ரூ.48.01 இலட்சம் மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்!

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், அகமலை கிராமத்தில் இன்று (12.08.2026) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் மூலம் மக்கள் தொடர்புத்திட்ட முகாம் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு. இரா.வைத்திநாதன், இ.ஆ.ப. அவர்கள் தலைமையேற்று பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்கள் பெற்று அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி பேசுகையில்,

மக்கள் மாவட்ட நிர்வாகத்தைத் தேடி வந்த நிலை மாறி, மாவட்ட நிர்வாகமே மக்களைத்தேடி முகாமிட்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்க அரசு உத்தரவிட்டு ஒவ்வொரு மாதமும் தேர்வு செய்யப்பட்ட கிராமங்கள்தோறும் மக்கள் தொடர்பு முகாம்கள் நடைபெறுகின்றது. அந்த வகையில் கடந்த 15 நாட்களுக்கு முன்பு போடிநாயக்கனூர் வட்டம், அகமலை கிராமத்தைத் தேர்வு செய்து சுற்றுவட்டாரத்தில் உள்ள கிராம மக்களிடம் கோரிக்கைகள் குறித்து 48 மனுக்கள் பெறப்பட்டு, அம்மனுக்கள் மீது நடவடிக்கை எடுத்திடும் வகையிலும், மேலும், ஏற்கனவே பெறப்பட்ட மனுக்கள் நடவடிக்கை மீதும் என தற்பொழுது 89 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. அதேபோல் இன்று 33 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. இந்த மனுக்கள் மீதும் மற்றும் ஏற்கனவே பெறப்பட்டு நிலுவையில் உள்ள மனுக்கள் மீதும் உரிய நடவடிக்கை எடுத்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் நோக்கம் பொதுமக்களின் மனுக்களுக்குத் தீர்வு கிடைக்கச் செய்வது. அதேபோல் அரசின் நலத்திட்டங்கள் தகுதியுள்ள அனைத்து பயனாளிகளுக்கும் சென்றடையச் செய்வது என்பதேயாகும்.

பொதுமக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் வகையிலும், அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில், போடிநாயக்கனூரிலிருந்து உலுக்குருட்டி வழியாக அண்ணாநகர் பகுதிக்கு ரூ.2.01 கோடி மதிப்பீட்டில் சுமார் 8 கிலோ மீட்டர் தொலைவிற்கு தார்சாலை அமைக்க திட்டமிடப்பட்டு தற்பொழுது சுமார் 1.5 கிலோமீட்டர் தூரத்திற்கு புதிய சாலை அமைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள சாலைப் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்பட உள்ளது.

**ஜஸ்டின் மணிகண்டன் மருத்துவமனையில்அனுமதி**

**பழனி கோயில் நில மோசடி வழக்கில் கைதான ஜஸ்டின் மணிகண்டன் மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதி . சார்பதிவாளர் ஜஸ்டின் மணிகண்டன் மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நீதிமன்றக் காவலில் திண்டுக்கல் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த ஜஸ்டின் மணிகண்டன், மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதி.**

**இறப்புக்கு முன்**
**ரத்த தானம்**
**இறப்புக்கு பின்**
**கண் தானம்**

# பழநி நில மோசடி வழக்கில் கைதானவர் சிறையில் உயிரிழந்ததில் சந்தேகம்: உயர் நீதிமன்றத்தில் புகார்

பழநி நில மோசடி வழக்கில் கைதான வழக்கறிஞர் சிறையில் உயிரிழந்ததில் சந்தேகம் உள்ளதாக உயர் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. பழநி கோயிலுக்கு சொந்தமான ரூ.100 கோடி மதிப்புள்ள நிலம் மோசடியாக தனி நபர்கள் பெயரில் பத்திரப்பதிவு செய்யப்பட்டது இது தொடர்பான வழக்கை சிபிஐக்கு மாற்றக்கோரி அதிமுக முன்னாள் எம்எல்ஏ வேணுகோபால், தண்டா யுதபாணி சுவாமிகள் மடத்தின் அறங்காவலர் அன்னபூரணி சிவக்குமார், பழநி நகராட்சித் தலைவர் உமா மகேஸ்வரி ஆகியோர் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தனித்தனியே மனுத் தாக்கல் செய்தனர். மனுக்களில், பத்திரப்பதிவு மோசடி வழக்கை சிபிசிஐடி விசாரித்து வருகிறது. பத்திரப்பதிவு நடைபெற்ற சார்பதிவு அலுவலகத்தின் வழக்கமான பதிவாளர், அலுவலக உதவியாளர், மாவட்ட பதிவாளர், பொறுப்பு சார்பதிவாளர் என அனைவரிடமும் முழுமையாக விசாரணை நடத்த வேண்டியதுள்ளது. ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கை விசாரிக்க போதுமான முகாந்திரம் உள்ளது. எனவே, விசாரணையை சிபிஐக்கு மாற்ற வேண்டும். சிபிசிஐடி விசாரணைக்கு தடை விதிக்க வேண்டும் எனக் கூறப்பட்டிருந்தது. இந்த மனுக்கள் நீதிபதிகள் சி.வி.கார்த்திகேயன், ஆர்.சக்திவேல் அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது. மனுதாரர்கள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள், பத்திரப்பதிவு மோசடி வழக்கில் கைது செய்யப்பட்டு மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த வழக்கறிஞர் அன்வர்தீன் சிறையிலேயே உயிரிழந்துள்ளார். இந்த மரணத்தில் சந்தேகம் உள்ளது. எனவே பத்திரப்பதிவு மோசடி வழக்கை சிபிஐக்கு மாற்ற வேண்டும் என்றனர். அரசு வழக்கறிஞர், இந்த விவகாரத்தை அரசியலாக்க வேண்டாம். உரிய ஆவணங்கள், ஆதாரங்களின் அடிப்படையில் விசாரணை நடைபெற்று வருகிறது. கைது நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது. நில பதிவு மோசடிக்கான சதித்திட்டம் கடந்த மார்ச் மாதமே தொடங்கியுள்ளது என்றார். இதையடுத்து நீதிபதிகள், பழநி கோயில் தரப்பில் பதில் மனுத் தாக்கல் செய்ய உத்தரவிட்டு விசாரணையை ஆக. 24க்கு ஒத்திவைத்து உத்தரவிட்டனர்.

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA